## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.63/2023 நாள் : 24.08.2023

### வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து மண்டலங்களிலும் அடிக்கடி கழிவுநீர் தடைபட்டு செல்லும் தெருக்களில் உள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றிட தூர்வாரும் பணிகள் 25.08.2023 முதல் 02.09.2023 வரை மேற்கொள்ளப்படும்

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள அடிக்கடி கழிவுநீர் தடைபட்டு செல்லும் தெருக்களில் உள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றிட தூர்வாரும் பணிகள் 25.08.2023 முதல் 02.09.2023 வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

| மண்டலம் எண் | மண்டலம் | மொத்த தெருக்களின் எண்ணிக்கை | தூர்வாரப்படவுள்ள இயந்திர நுழைவாயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 16 | 163 |
| 2 | மணலி | 30 | 144 |
| 3 | மாதவரம் | 35 | 134 |
| 4 | தண்டையார்பேட்டை | 18 | 307 |
| 5 | ராயபுரம் | 51 | 281 |
| 6 | திரு.வி.க.நகர் | 90 | 433 |
| 7 | அம்பத்தூர் | 24 | 240 |
| 8 | அண்ணா நகர் | 71 | 480 |
| 9 | தேனாம்பேட்டை | 47 | 593 |
| 10 | கோடம்பாக்கம் | 96 | 634 |
| 11 | வளசரவாக்கம் | 36 | 275 |
| 12 | ஆலந்தூர் | 54 | 323 |

| | | | |
|---|---|---|---|
| 13 | அடையாறு | 78 | 589 |
| 14 | பெருங்குடி | 24 | 142 |
| 15 | சோழிங்கநல்லூர் | 50 | 539 |
| **மொத்தம்** | | **720** | **5277** |

……2.



முதற்கட்டமாக, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் 720 தெருக்களில் அமைந்துள்ள 5,277 இயந்திர நுழைவாயில்களில் 300 தூர்வாரும் இயந்திரங்கள், 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 35 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 60 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 537 கழிவுநீர் இயந்திரங்கள் மூலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றிட தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தூர்வாரும் பணிகள் மூலம் கழிவுநீர் தடைபட்டு செல்லும் குழாய்களில் கசடு நீக்கப்பட்டு கழிவுநீர் கட்டமைப்பு திறன் மேம்படுத்தப்படும். மேலும், வழக்கமாக நடைபெறும் தூர்வாரும் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவுநீரகற்று வாரியம்